# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி.எண்.21/2017 நாள்.-28-06-2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் திரு. **மு. சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் திரு.**மு. அன்பரசு** ஆகியோர் கூட்டாக விடுக்கும்

ஊடகச் செய்தி

# புதுவாழ்வு திட்ட ஊழியர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கிடுக !

மாண்புமிகு மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் அவர்களால் 10-05-2016ஆம் தேதியில் வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் தேர்தல் பரப்புரையின்போது தற்சமயம் புதுவாழ்வு திட்டம்-1ல் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் புதுவாழ்வு திட்டம்-2ல் (TNRTP)ல் தொடர்ந்து பணியமர்த்தப்படுவர் என்று வாக்குறுதியளித்தார். மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தற்போதைய தமிழக அரசு முன்னாள் முதல்வரின் வாக்குறுதியை நிறைவேற்றிடாமல், அவரது வாக்குறுதியை புறந்தள்ளி 21-06-2017 அன்று சட்டசபை மானியக் கோரிக்கையில் புதுவாழ்வு திட்டம் தொடரும் எனவும், பணியாளர்களை பற்றி ஏதும் குறிப்பிடாமல் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 23-06-2017 முதல் அனைத்து அலுவலர்களின் பணியும் பறிக்கப்பட்டது. இதனால் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் சுமார் 1200க்கு மேற்பட்ட ஊழியர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இது மனித உரிமை மீறலாகும். 1200 குடும்பங்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தங்களின் பணிப்பாதுகாப்பு வழங்க வேண்டும், நான்கு வருடங்களுக்கான ஊக்கத்தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 28-06-2017 முதல் மாநில மகளிர் வாழ்வாதார திட்ட அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தி வருகிறார்கள். முன்னாள் முதல்வர் அறிவித்த அறிவிப்பின்படி அதே வழியில் நடக்கும் தமிழக அரசின் முதல்வர் அவர்கள் உடன் தலையிட்டு, மீண்டும் அவர்களுக்கு பணி வழங்கி 1200 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட ஆவன செய்யுமாறு தமிழ்நாடு அரசுஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**(மு. அன்பரசு)**

பொதுச் செயலாளர்